உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 7 | 1925ஆம் மார்ச்மீ | பகுதி 3

தெய்வ வணக்கம்

வலாரியல லாகுல மிலாதகல வேகரிய
மாலறியும் நாலு மறை நூல்
வலானலை விலணகி கிலான் மலைவிலாணிவர்
மனோலய வுலாச முறவே
உலாவரு கலோலமக ராலய சலங்களும்
உலோகநிலை நீர் நிலையிலா
வொலா வொலி நிசா சர ருலோகமதெலா மழல்
உலாவிய நிலாவு கொலைவேல்
இலாவட கலாவினோத வாசிலி முகாவி
லோசனு சினசிலா தணிவிலா
சிலாமல ரெலாமதிய யோகிமதி சேலொழிய
சேவக சராப முகிலாம்
விலாசகலி யாணகலை சேரபசு மேலமுலை
மேவிய விலாச வகலன்
விலாழியினி லாழியகல் வானிலன லாரவிடு
வேழமினை ஞன் கைவேலே

அருணகிரிநாதர் அருள் வாக்கு

ஹிதோபதேசம்.

காலையிலெழுதலின் குணம்.

" புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
சுத்த நரம் பினல் தூய்மையுறும்-பித்தொழியும்
தாலவழி வாதபித்தந் தத்தம்நிலை மன்னுமதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்"—

வைகறைத்துயிலெழு-(ஔவையார் உபதேசம்)

நாடோறும் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். எழும்பொழுது தெய்வந்தொழுது எழல் வேண்டும். தொழுகையில் மனத்தை வேறிடத்தில் வைக்காமல் கடவுளிடத்திலேயே வைத்து இதற்குமுன் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னிக்க வேண்டும் என்றும் இனி அப்படி பாவஞ்செய்யாம லிருக்குமாறு காப்பாற்றவேண்டு மென்றும் நல்லறிவைத் தந்து அவருடைய அடியாரில் ஒருவனாகக் கொள்ளவேண்டு மென்றும் பிரார்த்திக்க வேண்டும்.

" அவனருள் அற்றால் அனைவரும் அற்றார்;
அவனருள் உற்றால் அனைவரும் உற்றார்"

என்று பழமொழி வழங்குகிறபடியால் ஈசுவரனுடைய திருவருட் செல்வம் பெற முயலாதவன் பகுத்தறிவு படைத்த மக்களிலே சேர்ந்தவனாகான். அவன் மாக்களிலே சேர்ந்தவனாவான்.

காலையில் எழும்போது கடவுளைத் தொழுவது போலவே இரவிலே படுக்கும் போதும் அன்றன்றளவில் நாம் செய்யும் நன்மை தீமைகளை ஆலோசித்து நன்மையைக் குறித்து அவரை வணங்கவேண்டும். தீமையைக் குறித்து வருந்தி அவரை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாடோறும் செய்து வருவோமானால் நமக்கு ஈசன் திருவருட் செல்வம் பெருகும். திருவருட் செல்வம் பெற்றவர்களுக்குப் புவியில் புகழும் முடிவில் பேரின்பவாழ்வும் கிட்டுமென்பதில் ஐயமில்லை.

சங்கராசாரியார் சரித்திரம்.

சங்கராசாரியார், மலையாள நாட்டில் காலடி என்னும் கிராமத்தில் சிவகுரு என்னும் பிராமணோத்தமரின் அருந்தவப் புதல்வராக அவதரித்தார். சிவகுரு என்பவர் அத்திரி மகாமுனிவரின் அருங்குலத்தில் உதித்த சிவபக்த சிரோமணி.

அந்த அந்தணர் நெடுநாட்களாகப் புத்திரப் பேறில்லாமல் வருந்தினார். அப்பால் சிவபெருமான் அவரிடம் இரக்கம் கொண்டு அவர்கனவிலே தோன்றி, "தேவர்கள் எம்பால் வந்து உலகத்தில் அதர்மம் மேலிட்டிருப்பதாயும் அதனால் எல்லோரும் இடர்ப்படுவதாயும் கூறித் தர்மஸ்தாபனம் செய்ய வேண்டும் என்று எம்மை வேண்டிக் கொண்டனர். அதனால் நாம், பூமியில் ஓர் அந்தண குமாரனாக அவதரித்துத் துஷ்ட ஆசாரங்களை ஒழித்துத் தர்மம் செழித்தோங்கத் தக்க ஸந் மதத்தைப் ஸ்தாபிப்பதாக வாக்களித்தோம். அதன்படி உமக்குப் புத்திரராக அவதரிப்போம்" என்று தெரிவித்து அவ்வாறே அவதரித்தனர்.

சங்கராசாரியார் மன்மதனைப் பழிக்குந் திருமேனி கொண்டவராய் விளங்கினார். அவருடைய மூன்றாவது வயதில் அவரையீன்ற அருந்தவச் செல்வராகிய சிவகுரு என்பவர் சிவபதமடைந்தனர். அப்பால் சங்கரர்,

தம்முடைய அன்னையையே தெய்வ மாகக் கொண்டு நல்லவழியிலே நடந்து வந்தார்.

பின்னர் ஐந்தாம்வயதில் அவர்க்கு வெகு சிறப்பாக உபநயனம் நடந்தது. அப்பால் அவர் ஓர் ஆசாரியரை யடைந்து பிரமசரிய விரதத்துடனிருந்து வேதாத்யய னம் செய்து வந்தார். அவர் தாம் கொண்ட விரதத்திற் கேற்றபடி நாடோறும் பிக்ஷை யெடுத்து உண்டு வந் தார்.

அப்படி பிக்ஷை யெடுத்து வருகையில் ஒரு நாள் அவர் ஒரு வீட்டிற்குப் போனார். அப்பொழுது அவ் வீட்டில் அவருக்கு பிக்ஷையிடுதற் கொன்று மில்லாமற் போகவே அந்த வீட்டிலிருந்த மங்கையர்கள் வருந்தின ர்கள். அப்பால், கடைசியில் ஒரு நெல்லிக்கனியைக் கொண்டுவந்து கொடுத்து "இவ்வேளை இது தான் வீட் டிலிருந்தது. பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்" என்று முகமன்கூறி அனுப்பினார்கள்.

அவர்களுடைய இந்த உபசாரணைகண்டு மகிழ்ந்த சங் கரா சாரியார், லக்ஷ்மி தேவியைத் தியானித்துத் துதி த்தார். துதித்த அளவில், அந்தக் கிருகம் முழுவதும் பொன்னெல்லிக் கனிகள் மாரியாக விழுந்து நிரம்பின. இந்த அதிசயங்கண்டவர்க ளெல்லோரும் சங்கரா சாரி யாரின் மகிமை யுணர்ந்து மகிழ்ந்து அவரைப் புகழ்ந் தனர்.

இன்னொரு நாள் இந்த மகானுடைய அன்னையார் நதிக்கு ஸ்நானத்துக்குச் சென்றார்; பாதிவழியில் நடக்க சக்தியில்லாமல் கஷ்டப்பட்டார். அதைக்கண்ட இந்த மகான், நதிக்கு அதி தேவதையைச் சில சுலோகங்க

னால் துதித்தார். துதித்த அளவில் அந்த நதி இவர் அன்னையாரிருக்கும் இடத்திற்குச் சமீபமாய்ப் பெருகியது.

இவ்வாறு அவர் இளமையில் அநேக அற்புதங்களைச் செய்து கொண்டே குருவினிடம் சகலவித்தைகளையும் சந்தேகமற வெகுசீக்கிரத்தில் கற்றுணர்ந்தார். அப்பால் இவருடைய எட்டாவது வயதில் இவர்க்கு விவாகம் செய்விக்க இவருடைய அன்னையார் யத்தனப்பட்டார். அதனையறிந்த மகான், 'எனக்கு ஸந்நியாஸங் கொள்வதிலேயே விருப்ப மிருக்கிறது. விவாகத்தில் விருப்பமில்லை." என்றார். அதைக் கேட்டதும் அவ்வம்மையார் பெருந்துயரமடைந்து பலபல நியாயங்கள் கூறி விவாகம் செய்து கொள்ளும்படி அவரைக் கட்டாயப் படுத்தினர்.

மகான், தமது அன்னையாரிடம் ஸந்நியாஸத்தின் பெருமையை எடுத்துக்கூறி, "அம்மா, நான் துறவியானாலும் தங்களை மறக்கவே மாட்டேன்; எங்கிருந்தாலும் தங்களை நினைத்துக் கொண்டிருப்பேன். தங்களுடைய ஆராதனையை ஒருநாளும் செய்யத் தவறேன். தாங்கள் எனக்கு ஸந்நியாஸத்தை மேற்கொள்ள அநுமதி தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர்.

இவ்வாறு இவர்களிருவரும் வாக்குவாதம் செய்து கொண்டிருக்கையில் ஒரு நாள் இருவரும் பூர்ணா நதிக்கு ஸ்நானம் செய்யச் சென்றனர். மகான் நதியிலிறங்கி அமிழ்ந்து ஸ்நானம் செய்கையில் ஒரு பெரிய முதலை அவருடைய காலைக் கவ்விக்கொண்டது. அப்பொழுது அவர் அன்னையாரைப் பார்த்து, "அம்மா, ஒரு பெரிய முதலை என் காலைப் பிடித்துக் கொண்டது. நான் பெரிய ஆபத்

திலிருக்கிறேன். ஆதலால் ஆபத்தான இச்சமயத்தில் ஸந்நியாஸங்கொள்ள விரும்புகிறேன். நான் ஸந்நியாஸம் செய்து கொண்டால் முதலை என்னை விட்டுவிடும். "ஆதலால் ஸந்நியாஸங் கொள்ள எனக்கு விடையளியும்" என்று கைகுவித்து வேண்டிக் கொண்டார்.

ஆகா! மைந்தன் இப்படிப்பட்ட ஆபத்திலிருக்கும் போது ஒரு தாய் எதைத்தான் செய்யத் துணியாள்? அவளுடைய துயரந்தான் எப்படிப்பட்ட தாகும்? பொறுக்க முடியாத தாகுமல்லவா? எப்படி யேனும் மைந்தன் ஆபத்திலிருந்து தப்பினால் போது மென்று நினைப்பாளன்றோ? அப்படியே மகானுடைய அன்னையாரும் நினைத்து, "அப்பா, நீ உன் விருப்பப்படி ஸந்யாஸமே மேற் கொள்" என்று ஸந்நியாஸங் கொள்ள அநுமதி தந்தனர்.

பிறகு அம்மகான் அந்த நிலையிலிருந்தே ஸந்யாஸ த்தைக் கிரஹித்துக் கொண்டார். உடனே முதலையும் அவர் திருவடியை விட்டு விட்டது. இப்பொழுது மகான் வேறு ஜன்மமடைந்தா ராதலால் ஈசுவரன் அவருடைய சரீரத்தில் பிரவேசித்தார் என்று பெரியார்கூறுகிறார்கள்.

அப்பால் ஜகத்குரு கரையேறித் தம் அன்னையாரை வலம் வந்து வணங்கி, "அம்மா தங்களுடைய நிர்யாணகாலத்தில் நான் எங்கிருந்தாலும் வந்து காப்பேன். நீங்கள் இந்தக்காலடியிலிருந்து பகவத்தியானம் செய்து கொண்டிருங்கள்" என்று கூறிப் பிறகு குரு உபதேசம் பெற்றுக் கொள்ள விரும்பி அங்கிருந்தவாறே புறப் பட்டுச் சென்று பற்பல க்ஷேத்திரங்களைத் தரிசித் துக்கொண்டு கடைசியில் நர்மதாதீரம் போனார். அங்

கே ஒரு குகையில் கோவிந்த பகவத்பாதர் என்பவர் தவம் புரிவதைக்கண்டு அந்தக் குகையை மூன்று முறை வலம் வந்து பின் குகையின் வாயிலில் கரங்குவித்துக் கண்களிலிருந்து ஆநந்த பாஷ்பம் பெருக நின்று கொண்டு துதித்தனர்.

அவர் துதியைக் கேட்டதும், கோவிந்த பகவத் பாதர், ஸமாதி கலைந்து திருக்கண் திறந்து பார்த்து, "நீர் யார்?" என்று கேட்டார். கேட்ட போது ஆசாரியார், பத்து சுலோகங்களால் விடையளித்தார். தச சுலோகி என்று அந்தத் துதிக்குப் பெயர் வழங்கலாயிற்று. அந்தத் துதியினால் மனமகிழ்ந்த கோவிந்த பகவத் பாதர் ஆசாரிய ஸ்வாமிகளுக்குக் கிரம ஸந்யாஸம் கொடுத்துப் பின்னர் பிரம்மோபதேசம் செய்தருளினார். ஸ்வாமிகள் தம் குருநாதரிடம் சில காலமிருந்து அப்பால் காசிக்குச் சென்றார். அங்கே இவருடைய கீர்த்தி பரவியது. பின் அநேகர் இவரை வணங்கி இவர்க்குச் சிஷ்யர்களாயினர்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் ஒரு பிராமணர் ஆசாரியரை அடைந்து பாதத்தில் வணங்கி "என்னை மாணவனாக ஏற்றுக் கொண்டு ஆத்மஞான உபதேசம் செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

ஆசாரியர் "நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்?" என்று கேட்டார்.

பிராமணன், "ஸ்வாமி, நான் காவேரி நதி தீரத்திலிருந்து வருகிறேன். என் பெயர் ஸநந்தனன். ஆத்மஞானம் பெற ஆவல் கொண்டு அந்த உண்மையை உபதேசிக்க வல்லவர் யாவரென நெடுகலுந் தேடிக்கொண்டு வருகிறேன்; கடைசியில் தங்களைக் கண்டேன். தாங்

கள் தாம் என்னைக் கரையேற்றவல்ல சற்குரு நாதர் என்பது கண்டேன்" என்றான்.

ஆசாரியர் இந்தப் பிராமணனுக்குக் கிரம ஸந்யாஸமளித்தார். அன்றியும் அந்த அந்தணனிடம் அதிகப் பிரீதியுங் கொண்டார். அது கண்ட ஏனைய மாணவர்கள், ஸநந்தனனிடம் பொறாமை கொண்டனர். அது வர வர அதிகரித்தது. அதனை அறிந்த ஆசாரியர், ஸநந்தனனுடைய குரு பக்தியை அவனிடம் பொறாமை கொண்ட மற்றவர்களுக்கு உபதேசிக்கக் கருதிச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்.

பின் கங்கையில் பூரணப் பிரவாகம் வந்த ஒரு நாள் ஆசாரியர் அக்கரைக்குப் போய் நின்று கொண்டு இக்கரையிலிருந்த தமது சிஷ்யர் ஸநந்தனரை, 'இந்தக் கரைக்குவா' என்றழைத்தார். ஸநந்தனர்," ஸம்ஸார மென்னும் ஸாகரத்தினின்று கரையேற்றவல்ல நம்முடைய குருநாதருடைய பாதாரவிந்தம் நம்மை இந்த ஆற்றின் அக்கரை சேர்க்காமற் போய்விடுமா?" என்று துணிந்து ஆற்றில் இறங்கி நடந்தார்.

அவர் இறங்கி அடிவைக்கும் இடமெல்லாம் ஒவ்வொரு தாமரை மலர் தோன்றி அவர் திருவடியைத் தாங்க அவர் அக்கரை சேர்ந்து குருநாதரைப் பணிந்தார்.

ஆசாரியர் அவரிடம் சந்தோஷமடைந்து அவரைக் கட்டித் தழுவிக்கொண்டு, "பத்ம மலரிலே பாதம் வைத்து நதியைக் கடந்த உத்தமனே, உனக்கு இனிப் பத்மபாதர் என்னும் நாமம் வழங்கக் கடவது" என்று யோக்கியதா நாமம் அளித்தார். இதைக் கண்ட மற்ற

சிஷ்யர்களெல்லாம் பொறாமை நீங்கி, பத்மபாதரிடம் அன்பு பாராட்டத் தலைப்பட்டனர்.

பின்பொரு நாள் ஆசாரியர் காசியில் மணிகர்ணிகா கட்டத்திற்கு ஸ்நானம் செய்யப் போனார். போகும் போது அவருக்கு முன்னே சண்டாளனொருவன் நான்கு நாய்களைக் கொண்டுவந்தான். அவனைக் கண்டதும் சங்கரா சாரியாருடைய சிஷ்யர்கள் அவனைத் தூரவிலகிப் போகும்படி கைதட்டிச் சைகை காட்டினார்கள். சண்டாளன் அத்வைத உபதேசம் செய்யும் ஞானவானுக்கு இந்தப் பேத புத்தி எப்படி வந்தது?" என்று கேட்டான்.

ஆசாரியர், அது கேட்டு மகிழ்ந்து, ஐந்து சுலோகங்கள் பாடி, "பிர்மமே ஸத்தியம் மற்றவை அநித்தியம் என்று அறிபவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனானாலும் அவனே எனக்குக் குரு" என்றார்.

அப்பால் இந்தச் சண்டாளனையும் அவனுடன் வந்த நாய்களையும் அங்கே காணோம். விசுவேசுரரும் நான்கு வேதங்களும் நிற்கக்கண்டு யாவரும் வியந்தனர். ஆசாரியரும் பெருவியப்படைந்து இருகரங் கூப்பி ஈசுவரனை மனமுருகி மெய்யன்போடு துதித்தார். ஈசுவரன், "நீ பிர்ம ஸூத்திரத்திற்குப் பாஷ்யம் செய்து அத்வைத மதத்தை ஜகமெங்கும் பரவும்படி செய்வி" என்று அநுக்கிரகம் செய்து மறைந்தருளினார்.

ஆசாரியர் அப்பால் ஈசுவரனுடைய நியமனப்படி பிர்ம ஸூத்திரத்திற்கு பாஷ்யம் செய்தருளினார். இதை யறிந்து மகிழ்ந்த வியாஸ பகவான் ஆசாரியரிடம் வந்து அவரைப் புகழ்ந்தார். அவருக்கு வயது பதினாறென்றேற்பட்டிருந்தது. அந்தப் பதினாறுவது வயது

அன்றோடு முடிவதாயிருந்தது. அதனால் வியாஸர் அவருக்கு இன்னொரு பதினாறு வருஷகாலம் ஆயுளைத் தந்தார்.

இவ்வாறு ஆயுளும் மகிமையும் பெற்ற ஆசாரியார் பாரத கண்ட முழுவதும் யாத்திரை செய்து ஆங்காங்கு கிளம்பியிருந்த தூராசாரமான மதங்களைக் கண்டித்து அத்வைத மதத்தை நிலை நாட்டித் திக்விஜயம் செய்தனர். அப்பால் கர்மம் பெரிதென்னும் கொள்கையுடையவரா யிருந்த மண்டனமிச்ரர் என்பவரோடு வாதஞ் செய்து அவரை வென்றார். அதன் பின் அவர் மனைவி ஸரஸவாணி என்னும் மாதையும் வென்று அவ்வம்மையை வனதுர்க்காமந்திரத்தினாலே கட்டித் தாம் ஏற்படுத்தப் போகும் ஸாரதா பீடத்தில் எப்போதும் பிரஸன்னமா யிருக்கும் படி செய்தார். பின்னர் மண்டனமிச்ரருக்கு ஸந்யாஸம் கொடுத்து ஸுரேச்வரர் என்னும் திருநாமம் அளித்தனர்.

இவ்வாறு அத்வைத மதத்தை ஸ்தாபித்துக் கொண்டே ஆசாரியர் திருக்கோகர்ணம் போனார். அங்கே ஒரு பிராமணப் பையன் எட்டு வயதாயும் ஜடத்தன்மை நீங்காதவனாயிருந்தான். அவனை அவன் தந்தை அழைத்துக் கொண்டு வந்து ஆசாரியர் திருவடியிலே பணியும் படி செய்தார். ஆசாரியர் அப் பையனைத் தமது திருக்கரத்தினாலே தடவிக் கொடுத்து, "அப்பனே நீ யேன் இன்னும் ஜடத்தன்மையுடனிருக்கிறாய்?" என்று கேட்டார்.

பையன், உடனே கீர்வாணபாஷையில் ஆத்மதத்வம்

முழுவதையும் பன்னிரண்டு சுலோகங்களில் பாடியருளி ஞன்.

அதைக் கேட்டு ஆசாரியர்கள் மகிழ்ந்து அவனை ஆசீர்வதித்தார். அவனுடைய தந்தை 'இவன்' உலக வாழ்வை வெறுத்து வைராக்யம் அடைந்திருப்பதால் "இவன் இந்த மகானிடமே இருக்கத்தக்கவன்" என்று தீர்மானித்து ஆசாரியரிடமே மைந்தனை விட்டு விட்டுப் போய் விட்டான்.

ஆசாரியர் அந்தப் பையனுக்கு ஹஸ்தாமலகன் என்று பெயர் தந்து க்ரம ஸந்யாஸம் கொடுத்தருளினார். அப்பால் ஸ்வாமிகள், சிருங்ககிரிக்குச் சென்றார். அங்கே ஒரு நாள் அவர் துங்கை நதியின் மத்தியில் யாகம் செய்கையில் அங்கோரிடத்தில் தவளை, குஞ்சு ஈன்றது. அந்தக் குஞ்சு வெய்யிலில் தாகம் தாங்கமாட்டாமல் தவித்தது. அதற்கு ஒரு ஸர்ப்பம் படமெடுத்துக் குடைபோல் நிழல் தந்தது. அதைக் கண்டு வியப் படைந்த ஆசாரியர் அங்கே ஒரு பிராஸாதத்தை நிர் மாணஞ் செய்து அதில் ஸ்ரீ ஸாரதாம்பாளை உத்தம முகூர்த்தத்தில் ஸ்தாபித்து ஸ்ரீ சக்கரத்தையும் பிர திஷ்டை செய்தருளினார்.

அங்கே கிரி என்னும் பெயர்கொண்ட ஒரு ஸாது ஆசாரியர்க்கு சிஷ்யரானார். அவர், ஆசாரியர் தம்மிடத் தில் பரம ப்ரீதிகொள்ளும்படி பக்தி விசுவாசத்துடன் நடந்து கொண்டபடியால் அவர்க்குச் சகல ஞானமும் உண்டாகுமாறு ஆசாரியர் அநுக்ரகித்தார். உடனே அவர் தோடகம் என்னும் பெயர் கொண்ட ஒரு

வேதாந்த நூல் செய்தார். அதனால் அவர்க்குத் தோடகாசாரியர் என்று பெயருண்டாயிற்று.

பின்னர் ஒரு சமயம் ஆசாரியர் தமது அன்னையார் மரணாவஸ்தையிலிருப்பதாக அறிந்து உடனே காலடி போய் அவ்வம்மையாரை வலம் வந்து பணிந்து அவர்க்கு ஞான உபதேசம் செய்தார். அப்பால் அவ்வம்மையார் முன் விஷ்ணு தூதர்கள் வந்து அவர்களை வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

ஸ்வாமிகள் அப்பால் தம் அன்னையாருக்குச் செய்ய வேண்டிய உத்தரகிரியைகளைச் செய்து விட்டு மீண்டும் ஒரு முறை திக்விஜயம் செய்யப் புறப்பட்டு வழியில் துவாரகையில் ஒரு மடமும், பதிரிகையில் ஒரு மடமும் ஜகந்நாதத்தில் ஒரு மடமும் ஸ்தாபித்துப் பின் தெற்கே வந்து திருப்பதி, காளாஸ்திரி, சிதம்பரம், இராமேச்வரம் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு காஞ்சீபுரம் போனார். அங்கே, அப்பொழுது ராஜஸேன சோழனென்னும் ஓர் அரசன் அரசுபுரிந்தான். அவனுடைய உதவியால், ஏகாம்பரேசுவர ராலயத்தையும் வரதராஜர் ஆலயத்தையும் கட்டிமுடித்துப் பின் ஸ்ரீகாமாக்ஷி தேவியாருக்கு ஆலய நிர்மாணம் செய்வித்து அங்கே காமகோடிபீடத்தையும் ஸ்தாபித்தார்.

அப்பால் ஆசாரியர் அங்கே ஒரு மடத்தை ஸ்தாபித்து அங்கிருந்து சிலகாலம் சிஷ்யர்களுக்கு அத்வைத உபதேசம் செய்தருளினார்; அதன் பின் தமது சிஷ்யரில் ஒருவரான ஸுரேசுவரா சாரியாரிடம் யாவற்றையும் ஒப்புவித்து விட்டு மற்ற நான்கு மடங்களிலும் தமது நான்கு சிஷ்யர்களையும் அதிபராக ஸ்தாபனம் செய்து முடிவில் காமாக்ஷியம்பாளுடைய ஸமீபத்திலேயே நிர்விகல்ப ஸமாதியிலிருந்து ஸ்வஸ்ரூபமடைந்தருளினார்.

இந்தத் திவ்ய க்ஷேத்திரத்தில் இன்னும் அந்தப் பரமாசாரிய ஸ்வாமிகள் விக்ரக ரூபமாயிருந்து பக்த கோடிகளுக்கு அநுக்ரகம் செய்கிறார்.

துப்பறியும் தீரன்.

சைதாபுரத்தில் சங்கரலிங்கம் பிள்ளையென்னுமொரு பெரிய பிரபு வசித்து வந்தார். அவர் ஒரு பெரிய பிரபுவானாலும் பரமலோபி. தமது உறவினர்க்குக்கூட அவர் ஒரு காசு கொடார். அவர் சைதாபுரத்தில் ஊருக்கு வெளியே ஒரு பெரிய பங்களாவில் வசித்து வந்தார். அவருடைய மனைவியும் இறந்து விட்டாள்; மக்கள்களும் இறந்து விட்டார்கள். சுற்றத்தார் சிலரிருந்தனர். ஆனால் அவர்க்குத் திரண்ட செல்வமுண்டு. அவரிடம் ஒரு வேலைக்காரியிருந்தாள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் காலையில் வேலைக்காரி வழக்கம் போல் தன் வீட்டிலிருந்து தன் எஜமானுடைய வீட்டிற்கு வேலைக்குப் போனாள். தினம் இவள் போய்க் கதவைத்தட்டுவாள். தட்டியதும் அவர் திறப்பார். இன்று கதவு திறந்திருந்தது. அதைக்கண்டதும் எஜமானன் இன்று அதிகாலையில் எழுந்து விட்டார் போலிருக்கிறது என்று எண்ணிக்கொண்டே அவள் உள்ளே சென்றாள்.

பிரபு அந்த பங்களாவில் மேன் மாடியில் ஓர் அறையில் படுத்திருப்பது வழக்கம். வேலைக்காரி, கதவுதிறந்

திருப்பதற்குக் காரணமறிய எண்ணி நேரே அவ்வறைக்குச் சென்று பார்த்தாள். அந்த அறையில் படுக்கை யெல்லாம் இரத்தம் தேங்கியிருந்தது. அந்தப் பிரபு தலை உடைப்பட்டுக் கீழே பிணமாய்க் கிடந்தார். அந்தோ! வேலைக்காரி என்ன செய்வாள் பாவம்! பயந்து போய் இன்னது செய்வதென்று தெரியாமல் அவ்வறையைவிட்டு வெளியேவந்து வேறு பக்கம் பார்த்தாள். வீட்டுச் சாமான்கள் நாற்புறங்களிலும் சிதறிக்கிடந்தன. துணிமணிகளும் புஸ்தகங்களும் தஸ்தா வேஜுகளும் குவியில் குவியலாய்க் கிடந்தன.

இவற்றைக்கண்ட வேலைக்காரி இனி நாமிங்கிருக்கப்படாதென்று கருதி உடனே ஓடிப் போலீஸ் ஸ்டேஷனில் தெரிவித்தாள். போலீஸ்காரர்வந்து பார்த்தார்கள். அவர்களும் அக்காட்சியைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இந்த வேலையைச் செய்தவன் யாராயிருப்பான் என்று நெடுநேரம் ஆலோசித்தார்கள்; பிணத்தை வீட்டைவிட்டு அப்புறப்படுத்தி எப்படிப் பத்திரப்படுத்த வேண்டுமோ அவ்வாறு பத்திரப்படுத்தி வைத்தார்கள்.

அந்த ஊரில் கமலக்கண்ணன் என்றொருவனிருந்தான். அவன் இப்படிப்பட்ட கொலைக்கேஸில் சம்பந்தப்பட்டுப் பலதரம் தண்டனை யடைந்திருக்கிறான். அவன்மீது போலீஸார் சந்தேகங் கொண்டு, அவனைத் தேடிப்பார்த்தார்கள். அவனைக்காணோம், வீட்டில் விசாரித்தார்கள். வீட்டிலுள்ள அவன் மனைவிமக்கள் தங்களுக்குத் தெரியாதென்று சொல்லி விட்டார்கள். வீட்டை விட்டு என்றைக்கு வெளிப்பட்டான் என்று கேட்கவே,

அவர்கள் அவன் போய் ஒருவாரமாயிற்று என்று சொன்னார்கள். போலீஸாருக்குச் சந்தேகம் பலப்பட்டது. அதன் பேரில் அவர்கள் தேடுதலுக் தேடத் தொடங்கினார்கள். மூன்று மாதமாயிற்று. அவன் அகப்படவில்லை. அப்பால் இறந்து போன பிரபுவின் உறவினரொருவர், என் உறவினரும் இவ்வூர் பிரபுக்களி லொருவருமாயிருந்த சங்கரலிங்கம் பிள்ளையை கண்டு பிடிப்பவர்களுக்கு ஆயிரம் ரூபா வெகுமதி கொடுக்கப்படும்" என்று விளம்பரப் படுத்தினார்.

இப்படி விளம்பரப்படுத்திய சில வாரங்களுக்குப் பிறகு துப்பறியுந் தீரர்களில் ஒருவனாகிய மோகன்ஸிங் என்பவர், "நாம் இதில் முயற்சி செய்து கொலை செய்தவனைக் கண்டு பிடித்துப் பேர்வாங்க வேண்டும்" என்று கருதித் தன் கருத்தைத் தெரிவிப்பதற்காக ஒரு நாள் காலையில், தனக்கு மேலான அதிகாரியினிடம் போனான்.

அவர் இவனைக்கண்டதும், "வா அப்பா மோகன் ஸிங்! உனக்கு ஆள் அனுப்ப எண்ணினேன். நீ வந்து விட்டாய்; உனக்கு வயது நூறு" என்று கூறி, "துரை சிங்கப் பிரபுவைக் கொலைசெய்த கமலக்கண்ணனை முன் இரண்டு தடவைகளில் நீ கண்டுபிடித்துத் தண்டனைக்குள்ளாக்கியிருக்கிறபடியால் உன்னையே இப்போது அந்த அலுவலில் அனுப்புகிறேன்" என்று உத்தரவைக் கையில் தந்தார்.

"மோகன்ஸிங் உத்தரவைப் பெற்றுக் கொண்டு, இந்த வழக்கில் உழைத்துப் பேர்பெற வேண்டுமென்று இப்பொழுது நினைத்துத் தங்களிடந் தெரிவிக்கவே வந்தேன். அது, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலா

யிற்று" என்று கூறி அவரிடம் விடை கொண்டு வீட்டிற்கு வந்து உடனே புறப்பட்டு ரயில் ஸ்டேஷனுக்குப் போய்ப் பிரயாணச் சீட்டு வாங்கிக் கொண்டு மூன்றாவது வகுப்பில் வண்டியில் உட்கார்ந்து கொண்டான்.

வண்டி நகருந் தருணத்தில் இன்னொருவன் அவ் வண்டியிலே வந்து அவசரமாக ஏறினான். அவன் ஆறடி உயரத்துக்கு மேல் வளர்ந்தவனாயும் அந்த உயரத்துக்குத் தக்க பருமனாயு மிருந்தபடியால் வந்து வண்டியில் உட்கார்ந்ததும் அவன் பாதிவண்டியை மறைத்துக் கொண்டான். அவனை மோகன்ஸிங் பார்த்தான். அவன் விரிந்த மார்பும் பரந்த தோளும் சிவந்து அகன்ற கண்களும் பருத்த தலையும் முடையவனா யிருந்தான். அவன் தன் கையில் புத்தகமொன்றும் சிறு டிரங்குப் பெட்டியும் வைத்துக் கொண்டிருந்தான். மோகன்ஸிங் அவனைக் கவனித்தான். அவன் தன்னை நன்றாய்க் கவனித்தற்கிடங் கொடாமல் புத்தகங்களை முகத்துக்கு நேரே வைத்துப் படித்துக் கொண்டி ருந்தான். ஆயினும் மோகன்ஸிங் அவனைச் சற்றுப்பார்த்தும் பாராமலும் கவனித்துக் கொண்டே வந்தான். அவன் பயங்கரமான மனிதனா யிருந்தான். ஆனாலும் மோகன்ஸிங் அஞ்சவில்லை. இப்படிப்பட்டவர்களை அவன் எத்தனையோமுறை பார்த்து அவர்களுடைய கொட்டத்தை யெல்லாம் அடக்கியிருக்கிறான்.

மோகன் ஸிங்குக்குத் திருடர்களிடம் தோன்றும் அங்கசேஷ்டைகளெல்லாம் தெரியுமாதலால், அவன் சாவதானமாய்க் கவனித்து வரவே அவனுடைய தாடி பொய்த்தாடிபோல் தோன்றியது. உடனே சற்று நிதான

மாய்ப் பார்த்து இவன் தான் கொலைகாரனென்று நினைத்துத் தைரியமாய், "கமலக்கண்ணா! உன்னைக் கைது செய்திருக்கிறேன்" என்றான். அவன், "அடே, இதோ உன் மண்டை சிதறுகிறதுபார்" என்று கைத்துப்பாக்கியை நீட்டினான். மோகன்லிங் ஒன்றும் பேசாமல் விழித்துக் கொண்டே நாற்புறமும் திரும்பினான். அவன், "அடே, நீ இன்று தப்பமுடியாது. ஏன் வீணே விழிக்கின்றாய்? என் போன்றவர்களில் எத்தனை பேரை நீ அவஸ்தைப்படுத்தியிருக்கிறாய்? நல்ல வேளையாயின்று அகப்பட்டாய் நீ. இதோபார் இன்னும் சற்று நேரத்திலோ அல்லது அரைமணி நேரத்திலோ அல்லது ஒரு மணி நேரத்திலோ நீ சாகப் போகிறாய். பரமலோபியாகிய துரைசிங்கப் பிரபுவை நான் கொலை செய்தது மெய்யானாலும் அது பொய். உன்னை இப்போது கொலை செய்யப் போகிறேனே அது மெய் என்று காட்டுகின்றேன். இல்லாவிட்டால் என் பேர் கமலக்கண்ணனல்லன்" என்றான்.

இப்பொழுது மோகன்லிங் பயந்து விட்டான். அவன் கைகால் நடுங்கின. உடல் வேர்த்துப் போயிற்று. "அந்தோ இப்பொழுது இவன் பழிவாங்கு மெண்ணத்துடனிருக்கிறான். இவன் நம்மை விடப்போவதில்லை. என்ன இப்படிவந்து அகப்பட்டுக் கொண்டேன் இன்று. மோகன்லிங்கின் வாழ் நாள் இன்றோடு முடிந்தது போலும்" என்றெண்ணினான்; ஆயினும் உடனே தைரியங்கொண்டு அவன் தலையையும் முகத்தையும் உற்று நோக்கினான். மோகன்லிங் மனோதத்துவ சாஸ்திர நிபுணனாகையினால், அவன் கமலக்கண்ணனிடம் போர் புரியும் ஆற்றல்

யிருந்திருப்பதைக்கண்டு அவனைவிட்டுத் தப்பவழி பார்த்தான், "ஓ இவன் பணத்தாசை கொண்டவனுகக் காணப்படுகிறுன். இவனை அந்த ஆசை காட்டித்தான் நாம் தப்பவேண்டும்" என்றெண்ணி, "கமலக்கண்ணு, என் உயிர் போகுமுன் உனக்கோர் இரகசியம் கூறுகின்றேன். கேள். நீ துரைசிங்கப் பிரபுவைக் கொன்றது அவன் தன் வீட்டில் ஏராளமான பொருள் வைத்திருப்பானென்ற எண்ணங்கொண்டு தானே,' அது உனக்கு அகப்படவில்லை. ஆனுல் நான் அவர் வீட்டைச் சோதனை போட்ட போது, அவர் பணஞ் சேகரித்து வைத்திருக்கும் இடத்தைக்கண்டு பிடிக்கத்தக்க சில தஸ்தாவேஜுகள் எனக்குக்கிடைத்தன. அவற்றை நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். நீ என்னைக் கொன்று விடுவாய். அதனுல் நீ தப்பப்போவதில்லை. உன்னைப் போலீஸார் இலகுவில் விடமாட்டார்களல்லவா? கையில்; பணமிருந்தால் நீ தப்பலாம். உன்னுடைய உயிரை நீ எப்படி விரும்புகிறுயோ அப்படியே நானும் என் உயிரை விரும்புகின்றேன். ஆகையினுல் என்னை இப்பொழுது சுடாதே! உனக்குப் பணமிருக்குமிடந் தெரிவிக்கிறேன்; இதைப்பற்றி வேறு உதவிகள் செய்து உன்னைக் காப்பாற்றுகிறேன். ஆனுல் நீ ஒன்று செய்ய வேண்டும். நீ அடையும் பொருளில் எனக்குப் பாதிகொடுத்து விடவேண்டும்" என்று கூறிப் பயத்துடனின்றுன்.

கமலக்கண்ணன் கைத்துப்பாக்கியை அவனைப்பார்த்து நீட்டியபடியே இருந்தானுலும் அவனுடைய முகத்தில் முன்னிருந்த ஆத்திரமடங்கிய குறிதோன்றியது. அதனையறிந்த மோகன்ஸிங் இதுதான் சமய

மென்றெண்ணி, 'இதோபார் அந்த தஸ்தா வேஜு' என்று கூறித் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தைக் காட்டினான். கமலக்கண்ணன் அதை வாங்கத் தன் இன்னொரு கரத்தை நீட்டினான். அப்பொழுது பார்வையுமாறிற்று. இதையறிந்த மோகன்ஸிங், துப்பாக்கி பிடித்திருக்கும் அவனுடைய கரத்தைச் சடக்கெனப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையினால் கைவிலங்கை யெடுத்து அவன் தலையில் புடைத்தான். உடனே இரண்டு வெடிச்சத்தம் உண்டாயது; வண்டி முழுவதும் புகை வெடிகள் வண்டியின் மேற் பாகத்தைத் துளைத்துக் கொண்டு சென்றன. இப்பொழுதும் மோஹன்ஸிங் ;கமலக்கண்ணன் கரத்தைப் பிடித்தபிடி விடவில்லை. பிறகு இருவருக்கும் போர் நடந்தது. முடிவில் மோகன்ஸிங் அவனுடைய துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு கொலைபாதகனுடைய கையில் விலங்கையும் மாட்டி நையப்புடைத்தான். அவன் அடிபொறுக்கமாட்டாமல் கீழே விழுந்தான்.

இது முடிந்ததும் வண்டி அடுத்த ஸ்டேஷனுக்குப் போயிற்று. ஸ்டேஷனில் வண்டி நின்றதும் மோஹன்ஸிங் கமலக்கண்ணனைப் போலீஸார் வசம் ஒப்புவித்தான்.

சிறியவர்க்குப் பெரியபுராணம் விலை. 8

ஸம்ஹிதை வசனம் 1 8 0

தமிழ் நாட்டு முனிவர்.

டாக்டர் எஸ். சுப்ரமண்ய ஐயர்.

தமிழ் நாட்டு முனிவர் டாக்டர். எஸ். சுப்ரமண்ய ஐயர் மதுரை மாநகரில் கௌரவமுள்ள ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தவர். அவர் 1842-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதியில் பிறந்தார். அவரது தந்தையின் பெயர் சுப்பையர். அவர் பிறந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே அவரது தந்தையார் இறந்து போனார். பின்பு அவர் தமது ஒன்பதாவது வயது முதல் ஆங்கிலக்கல்வி கற்க ஆரம்பித்தார். கல்வியில் அவரது திறமையைக் கண்டு ஜில்லாக்கல்விக் கழகத்தார் அவருக்குப் படிப்பதற்கு உடகாரச்சம்பளம் அளித்து வந்தனர். முதல் முதலில் மணி ஐயர் அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டுவந்த ஆங்கிலப் பரீட்சையில் தேறினார். பரீட்சையில் தேறியவுடன் அவருக்கு மதுரை டிபுடி கலெக்டர் காரியாலயத்தில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. அப்பொழுது டிபுடி கலெக்டராக இருந்த ஸ்ரீமான் இராமராவ் அவரது புத்தி கூர்மையையும், ஆழ்ந்த அறிவையும் கண்டு வியந்து அவரை மிகுந்த கௌரவத்துடன் நடத்தி வந்தார்.

பின்பு அவர் கலெக்டரின் காரியாலயத்தில் ஓர் உத்தி

யோகத்தில் அமர்ந்து அதிலிருந்து கொண்டே சட்ட நூல்களைப் படித்து நியாயவாதி (பிளீடர்) பரீட்சையில் தேறினார். நியாயவாதி பரீட்சையில் தேறியதும் அவருக்கு உடனே ஸன்னது அளிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் அவர் கோர்ட்டுக்குச் சென்ற பொழுது ஜில்லா நீதிபதியாக இருந்த ஸ்ரீமான் காட்டனுக்கு ஸலாம் செய்யவில்லையாம். கொஞ்சகாலம் கழித்து ஜில்லா கலெக்டர் அவரை பப்ளிக் பிராஸிக்யூடராக நியமித்தார். பப்ளிக் பிராஸிக்யூடராகச் சிறிது காலம் அவர் வேலை பார்த்து விட்டு மறுபடியும் கலெக்டர் காரியாலயத்தில் உத்தியோகத்துக்கு அமர்ந்தார். அப்பொழுது தான் மெட்ரி குலேஷன் எப். ஏ. என்ற ஆங்கிலப் பரீட்சைகள் ஏற்படுத்தப்பட்டன. கலெக்டரின் காரியாலயத்தில் உத்தியோகம் பார்த்துக் கொண்டே அவர் மெட்ரி குலேஷன் எப். ஏ. முதலிய பரீட்சைகளில் தேறிப் பின்பு சென்னை உயர்தரநீதி மன்றத்தில் ரிபோர்ட்டராக இருந்த ஸ்ரீமான் ஜே. சி. மில்ஸ் என்பவரிடத்தில் அப்ரெண்டிஸாகச் சிறிது காலமிருந்தார். பிறகு அவர் மதுரைக்குச் சென்று அங்கே ஆறுமாதகாலம் தாசில்தாராக வேலை பார்த்து வந்தார். தாசில்தார் வேலையை விட்டதும் அவர் சென்னை நகருக்கு வந்து தம்மை ஹைகோர்ட்டு வக்கீலாகப் பதிவுசெய்து கொண்டார். பின்பு அவர் முதல் முதலில் மதுரையிலேயே தமது வக்கீல் தொழிலை நடத்த ஆரம்பித்தார்.

1870-ம் ஆண்டில் அவர் மதுரை நகரபரிபாலன ஸபை (முனிசிபல் சபையின்) அங்கத்தினராகவும், ஜில்லா போர்டு ஸபையின் அங்கத்தினராகவும் நியமிக்கப்

பட்டார். அவர் இந்தச் சபைகளில் அங்கத்தினராக இரு ந்தகாலத்தில் பொது ஜனங்களுக்குப் பலவித நன்மை களைச் செய்து வந்தார். அதிகமான தொகையைச் செ லவு செய்து பொது ஜனங்களின் சுகாதாரத்திற்காக மதுரையில் அவர் ஓர் அழகிய தோட்டத்தை ஏற்படுத் தினார். மதுரையிலுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத் தைச் சுற்றி மற்றொரு தோட்டத்தையும் அமைத்தார். எட்வர்டு சக்ரவர்த்தி இளவரசர் என்ற முறையில் மதுரைக்கு விஜயம் செய்த பொழுது அவருக்கு ஸ்ரீமான் மணி ஐயர் ஓர் உபசாரப்பத்திரத்தை வாசித்துக் கொடுத் தார். பின்பு அவர் மதுரை நகரபரிபாலன சபையின் உதவித்தலைவராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது சென்னைக் கவர்னராக இருந்த ஸர். எம். இ. டப், மணி ஐயரின் திறமையையும் அறிவையும் கண்டு வியந்து அவரைச் சென்னைச் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினராக நியமித்தார். 1877-ம் ஆண் டில் அரசாங்கத்தார் அவருக்கு ஒரு ஸன்மானப் பத்தி ரத்தை அளித்தார்கள்.

1884-ம் ஆண்டில் திடீரென்று அவரது மனைவி யார் இறந்து போனார். பிறகு அவர் மத ஆராய்ச்சியில் பற்றுடையவராய் மதங்களை ஆராய்ச்சி செய்ய ஆரம் பித்தார். அக்காலத்தில் அவர் தமிழ், ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் சிறந்த பாண்டித்தியம் பெற்று விளங்கினார். அவரது புலமையையும் திறமையையும் பாராட்டாதவர் அக்காலத்தில் ஒருவருமில்லை. 1888-ம் ஆண்டில் அவர் அரசாங்க நியாயவாதியாக நியமிக்கப் பட்டார். முதல் முதலில் அரசாங்க நியாயவாதியாக

நியமிக்கப்பட்ட இந்தியர் அவரே. அரசாங்க நியாயவாதி யாக இருந்த பொழுது அவர் பல சிக்கலான வழக்குக ளைத் திறம்பட நடாத்திப் பேரும் புகழும்பெற்ருர்.

ஸ்ரீமான் ஐயர் பொதுஜன சேவை செய்து வந்த காலத்தில் அவர் பொதுஜன முன்னேற்றத்திற்காக பல அரிய ஊழியங்களைச் செய்திருக்கின்ருர். தேசத்திற் காகவும், ஜனங்களுக்காகவும் அவர் செய்த காரியங்கள் அளவிடற் பாலனவல்ல. தேச நன்மைக்கென அமைக்கப் பட்ட காங்கிரஸ் மகாசபையை ஸ்தாபித்தவருள் ஸ்ரீமான் ஐயரும் ஒருவராவார். 1914-ம் ஆண்டில் சென் னையில் நடந்த காங்கிரஸில் அவரே உபசரணைத் தலை வராக இருந்தார். 1885-ம் வருஷத்தில் அரசாங்கத் தார் அவரைச் சென்னை ஸர்வகலாசாலையில் ஓர் அங்கத் தினராக நியமித்தார்கள். சிறது காலங்கழித்து அவர் சென்னை ஸர்வகலாசாலைக்கு உதவி சான்ஸலராக நியமிக்கப் பட்டார். அப்பொழுது அவர் கல்வி அபி விருத்திக்காகப் பெரிதும் பாடுபட்டு உழைத்து வந்தார். அவரது அரிய ஊழியத்தைப் புகழ்ந்து அரசாங்கத்தார் 1908-ம் ஆண்டில் அவருக்கு "டாக்டர்" என்ற பட் டத்தை அளித்தார்கள். 1895-ம் வருஷத்தில் அவர் சென்னை உயர்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டார். பின்பு அவர் சில வருஷங்கள் பிரதம நீதிபதியாகவும் வேலை பார்த்தார். 1900-ம் ஆண்டில் அவருக்கு "ஸர்" பட்டம் வழங்கப் பட்டது. 1907-ம் வருஷம் நவம்பர் மாதம் 13-ந்தேதி யன்று அவர் நீதிபதி வேலையினின்று விலகிக் கொண்டார்.

நீதிபதி வேலையை விட்டதும் அவர் நாட்டின் நலத்

யைக் கருதி பெரிதும் உழைத்து வந்தார். மதத்தின் பொருட்டும் அவர் பல அரிய ஊழியங்களைச் செய்து வந்தார். சுவாமி விவேகாநந்தர் மேல் நாடுகளுக்குச் சென்று ஹிந்து மதத்தையும், அதன் பெருமையையும் பரப்புவதற்குத் துணையாக நின்றவர் ஸ்ரீமான் மணி ஐயரேயாவர். சட்ட ஞானத்தில் தங்களுக்கு இணையாக இந்தியருள் எவருமில்லை யென்று கர்வங்கொண்டிருந்த ஆங்கில பாரிஸ்டர்களுக்கு "இந்தியர்களும் மிகுந்த சட்டஞான முடையவர்கள்" என்பதை நிரூபித்துக் காட்டியவரும் ஸ்ரீமான் மணி ஐயரேயாவர். 1915 ஆண்டில் அவர் சுயஆட்சி சங்கத்தின் தலைவராக இருந்து தேசத்திற்கு அரிய தொண்டாற்றி வந்தார். தேச கௌரவத்தையும், இந்தியர்களின் சுயமதிப்பையும் காப்பதற்காக அவர் அரசாங்கத்தாரால் தமக்களிக்கப்பட்டிருந்த "ஸர்" பட்டத்தையும் துறந்தார். நாட்டுக்குப் பல துறைகளிலும் தொண்டியற்றிவந்த இப்பெரியார் 1924ம் வருஷம் டிசம்பர் மாதம் 5-ந்தேதி யன்று இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகு சென்றார். அப்பெரியாரது ஆத்மா சாந்தி யடைய இளைஞர்களாகிய நீங்கள் அவர் மேற்கொண்ட வழியைப்பற்றி, கல்வியில் சிறந்தவர்களாகவும் ஒழுக்க முடையவர்களாகவும் தேசப்பற்றும் மதப்பற்றும் உடையவர்களாகவும் இருக்க முற்பட வேண்டும்.

ஒழுக்கமுடையவனே உயர்வடைவான்

யோசேப்பு யாக்கோப்பு என்பவனுடைய பிள்ளை, யாக்கோப்புக்கு இரண்டு மனைவிகள். பன்னிரண்டு பிள்ளைகள். பத்துப்பேர் ஒருத்தியின் பிள்ளைகள். இன்னொருத்திக்கு யோசேப்பு, பென்யமீன் என்று இரண்டு பிள்ளைகள்.

யோசேப்பு நல்லவன்; கர்த்தரிடம் அன்புடையவன். ஆதலால் அவனிடம் யாக்கோப் பிரியமுடையவனாயிருந்தான். சகோதரர்களெல்லாம் அதனால் அவனைப் பகைத்தார்கள். ஆனால் யோசேப்பு அவர்களிடம் சகஜமாகவே இருந்து வந்தான்.

யோசேப்பு ஒருசமயம் இரண்டு சொப்பனம் கண்டான். அவற்றை அவன் தன் சகோதரரிடம் சொன்னான். ஒன்று-யோசேப்பு தன் சகோதரருடன் வயல்களிலே அறுத்த அரிகளைக் கட்டிக் கொண்டிருக்கையில், தன் அரிக்கட்டு நிமிர்ந்து நின்றதாகவும் அவர்களுடைய அரிக்கட்டுகள் வணங்கி நின்றதாகவும் கண்டான். இன்னொன்று சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் வந்து தன்னை வணங்கினதாகக் கண்டான்.

யோசேப்பு இந்தக்கனவுகளை வெளியிடவே அவர்கள் அவன்மேல் இன்னும் அதிகமான பகை கொண்டார்கள். ஒரு சமயம் அவர்கள் ஆடுமேய்க்கக் காட்டிற்குச் சென்றிருந்தார்கள். அவர்களைப்பார்க்க யோசேப்பு

காட்டிற்குப் போனான். அவனை முதலில் அவர்கள் கொன்று விட ஆலோசித்தார்கள்; பிறகு அவனை அவ்வழியே வந்த ஒரு வர்த்தகனுக்கு விற்று விட்டார்கள்; அவனுடைய அங்கியை ஆட்டின் இரத்தத்தில் தோய்த்து யாக்கோபுக்குக் காட்டி விட்டார்கள். யாக்கோபு, யோசேப்பை ஏதோ துஷ்டமிருகம் கொன்று விட்டதாகத் தீர்மானித்துப் பெருந்துக்கமடைந்தான்.

யோசேப்பை வர்த்தகனிடமிருந்து எகிப்தின் அரசனுடைய தலையாரிகள் தலைவனாகிய போத்திப்பார் என்பவன் வாங்கினான். அவன் யோசேப்பின் உத்தம குணங்களைக்கண்டு அவனைத் தன் வீட்டு விசாரணைக்காரனாக வைத்துக் கொண்டான். போத்திப்பாரின் மனைவி ஒருநாள் யோசேப்பின் மீது அநியாயமாய்க் குற்றம் சுமத்தினாள். போத்திப்பார் அவனைச் சிறையிட்டு விட்டான்.

யோசேப்பு சிறைச்சாலையிலிருந்த இரண்டுபேர் கண்ட கனவை விடுவித்தான். அதற்குப்பின் எகிப்தின் அரசன், ஏழு மெலிந்த பசுக்கள் ஏழு கொழுத்த பசுக்களைத் தின்றதாகவும், ஏழு சாவியான கதிர்கள், ஏழு நல்ல கதிர்களைத் தின்றதாகவும் கனவுகண்டான். அதை அவன் யோசேப்பினிடம் சொன்னான். யோசேப்பு, "எகிப்தில் முதலில் ஏழுவருஷம் செழிப்பாயிருக்கும்; பின்னால் ஏழு வருஷம் பஞ்சம் உண்டாம்" என்று விடுவித்தான்.

யோசேப்பினிடம் அரசன் சந்தோஷங் கொண்டு அவனை விடுதலை செய்து அவனுக்குத் தலைமை அதிகாரி உத்தியோகங் கொடுத்தான். யோசேப்பு புத்திசாலியானதால், செழிப்பாயிருந்த ஏழு வருஷகாலங்களிலும் தானியங்களை ஏராளமாய்ச் சேகரித்து வைத்தான்.

யோசேப்பின் சகோதரர் தானியம் வாங்குவதற்காக எகிப்துக்குப் போய் யோசேப்பைக் கண்டு தரைமட்டும் குனிந்து வணங்கினார்கள். அப்பொழுது யோசேப்புக்கு அவன் முன்பு அரிக்கட்டுகள் வணங்கியதாகக் கண்டகனவு நினைவுக்கு வந்தது. தகப்பனையும் தன் சகோதரன் பென்யமீனையும் அவர்கள் நேசிக்கிறார்களா இல்லையா என்று பார்க்க, அவர்களை அவன் மறைவில் வைத்திருந்தான். அவன் கர்த்தருக்குப் பயந்தவனானதினால் கொஞ்சநாளில் அவர்களில் ஒருவனைத்தவிர மற்றவர்களை விட்டு விட்டான்.

யோசேப்பு மிகவும் இரக்கமுடையவன். ஆனதினால் அவன் அவர்களுடைய கோணிப்பைகளில் தானியத்தை நிரப்பி அவனவனுடைய பையில் அவனவனுடைய பணத்தையும் வைத்து அனுப்பிவிட்டான். கொஞ்சகாலத்துக்குப் பிறகு யாக்கோப்பு தன் மக்களைத் தானியம் வாங்கிவர மறுபடியும் அனுப்பினான். அவர்கள் பென்யமீனையும் தங்களோடு அழைத்துக் கொண்டு போனார்கள்.

யோசேப்பு அவர்களுக்கு ஒரு பெரிய விருந்து பண்ணி வைத்தான். தீமைக்குத்தீமை சரிக்கட்டாதிருங்கள் என்பது நீதியல்லவா?-பிறகு அனுப்புகையில் யோசேப்பு எல்லோருடைய பையிலும் தானியத்தை நிரப்பவும் பென்யமீனுடைய பையில் மாத்திரம் தன் வெள்ளிப் பாத்திரங்களைப் போட்டு நிரப்புவும் உத்தரவிட்டான். வேலைக்காரர்கள் அப்படியே செய்து அனுப்பினார்கள்.

யோசேப்பின் வேலைக்காரர்கள் அவனுடைய உத்

தாவின் படி பின் தொடர்ந்து போய் அவர்களை மடக்கிக் கொண்டு சோதனை போட்டார்கள்; பென்ய மீனுடைய பையில் வெள்ளிப்பாத்திரம் எப்படிவந்த தென்று பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் என்ன செய்வார்கள். உடனே யோசேப்பினிடம் போய் வணங்கி, "பென்ய மீனை அவன் தந்தையிடம் போகும்படி விடுதலை செய்ய வேண்டும். அவனில்லாமல் நாங்கள் அவரிடம் போக மாட்டோம்'' என்று சொல்லி அவனை வேண்டிக் கொண்டார்கள்.

யோசேப்பு இப்பொழுது அவர்கள் தன் சகோதரனையும் தந்தையையும் நேசிக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டான்; பிறகு சந்தோஷத் தோடு தன்னை இன்னானென்று காட்டிக் கொண்டான்; அன்போடு " தந்தையார் சுகமாயிருக்கின்றாரா?'' என்று விசாரித்தான். அவர்களெல்லோரும் யோசேப்பைக்கண்டு பயப்பட்டார்கள்.

யோசேப்பு, " நீங்கள் என்னை விற்றதை யெண்ணிச் சஞ்சலப் படாதீர்கள். ஏனென்றால் உங்களைக் காப்பதற்காக தேவனே என்னை முன்பே இங்கே அனுப்பினார் " என்று சொன்னான்; ஒவ்வொருவராகத் தழுவிக் கொண்டு முத்த மிட்டான்; " நீங்கள் தந்தையையும் நமது குடும்பத்தாரையும் எகிப்துக்குக் கூட்டிவாருங்கள் '' என்று சொல்லி அனுப்பினான். அவர்கள் அவ்வாறே எல்லோருடனும் வந்து சுகமாயிருந்தார்கள்.

அறநெறி வெண்பா.

சாதலென்றும் நேருவது சத்தியமாம் பொய்யல்ல ;
ஈது மனைவிமக்கட் கென்றுவைக்கின்—தீதுமிகுந்
தன்னியர்கள் ஆண்டே, அநுபவிப்ப ராதலினால்
சன்மார்க்கத் திற்புண்யஞ் செய். 46

தானபலன் கேட்கின் தகைமையுடன் செப்பிடுவன்
வானில்வாழ் வோரையடி மையாக்கும்—மேன்மையுறு
சூர்யமண்ட லம்பிளந்து சூக்ஷமமாய்க் கொண்டுசென்று
சீரியமோ க்ஷங்கொடுக்குந் தேர். 47

இல்லையென்பார்க் கில்லை யென்னா, திட்டுண்பா, னிந்திரனும்
இல்லையென்று யேற்போன் இழிநரனும்—வல்லதனி
லீதுணர்ந்து பூதமைந்தும் இற்றுக், கெடுமுன்னர்
யீதறனைச் செய்திடவே எண். 48

அணியா மொருவர்க்குத் தானுழைத்து னன்னம்;
பணிந்துநடக், கும்மருகி பாக்யம்—பிணங்கி
அருந்தகப்பன் கோபத்திற் காளாகா னுத்தமன்
தர்மத்தைச் செய்தல் சிறப்பு. 49

வயிற்றுக்குச் சோறின்றேல் வாட்டத்தாற், றூக்கம்
வியன்மதிநற், சொற்களிவை மேவா—நயமிகுந்த
தேவபக்தி யில்லையெனில் தர்மசிந்தை பூததயை
பாவபுண்ய ஞானமுமில் பார். 50

சத்தியத்தின் பாற்பட்ட சான்றோரை நீயென்றும்
சுத்தமிலா வார்த்தைகளாற் றூற்றாதே—இத்தரையில்
வித்தமுறு மன்னவரே மேன்மையுற்றுப் போற்றுவார்
முத்தையொத் 'தென்று மிதை, முன்- 51

கனியதனை வெட்டோன் குறிதவறாக் கோலால்
இனியவதைப் பெற்றடைவ னின்பம்—நனிகுறியில்;
நூறுதரத் தும்பயனென், நுண்ணறிவோய்! ஊன்றிமதி
நாறுமொரு காற்படிப்பே நன்று. 52

ஆசானிடம் பக்தி யன்புடனே செய்தென்றும்
நேச வழிபாடு நீ நடத்தல்—பேசரிய
வானி, னுயிர்வருக்கை யொத்து வளர்ந்திவை
ஞானச் சுளைபழுக்கும் நாடு.

[வரும்)

சே. ரா. கணபதிசுப்ரமண்ய அய்யர்,

பத்து! பத்து!! பத்து!!!

ஒரூரில் ஒரு கிழவியிருந்தாள். அவளிடம் ஒரு பொன் பதுமை இருந்தது. அதற்கு ஒரு கை மாத்திரம் பின்னமாயிருந்தது. அதைப் பந்த வைக்க வேண்டுமென்று அவள் எண்ணினாள். ஆனால், பொற்கொல்லர்கள் ஏதாவது சூது செய்வார்களென்று பயந்து அவர்களிடம் அதைக் கொடுக்க மனம் வராமல் வைத்திருந்தாள்; தன்னிடம் வந்த ஒவ்வொரு பத்தனையும் நோக்கி, "அப்பதுமை என் கையிலேயே இருக்க வேண்டும். நீ அதைப் பந்தவைக்க வேண்டும்" என்று கூறுவாள். இது முடியாத காரியமென்று எல்லோரும் போய்விடுவர். தந்திரமுள்ள பத்தனொருவன் இதையறிந்து கொண்டு அவளை எவ்விதமாகவாவது ஏமாற்றிப் பதுமையை அபகரித்து விட வேண்டும் என்று எண்ணி ஒரு சிறு அழகிய நாயை வளர்த்து வரலானான். அதற்குப் 'பத்து பத்து' என்னும் பதங்களைச் சொல்லி எவர் கையில் எப்பொருள் இருப்பினும் அதைக் கொண்டு வந்து விடும்படிக் கற்றுக் கொடுத்தான். அதுவும் கொஞ்ச நாட்களில் அப்படிச் செய்ய நன்றாகத் தெரிந்து கொண்டது.

அந்த நாயை அழைத்துக் கொண்டு அந்தத் தட்டான் கிழவியின் வீட்டிற்குப் போய் "அம்மா! நீங்கள்

உங்கள் பதுமையைக் கையிலேயே வைத்திருங்கள். நான் பின்னப்பட்டிருக்கும் கையை என் கையில் வைத்துக்கொண்டிருக்கிறேன். நீங்களே 'பத்து பத்து' என்று சொல்லுங்கள். அது பத்திக்கொள்ளும்" என்று இதமாகச் சொன்னான். கிழவி அப்படிச் செய்ய ஸந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டாள். தட்டான் நெருப்பை மூட்டி வேறாக விருந்த கையைத் தன் கையில் வைத்துக்கொண்டு சூடேற்றி 'பத்து பத்து' என்று சொல்லும்படி வேண்டினான். அவள் அவன் சூதை யறியாமல் 'பத்து பத்து பத்து...........' என்று பலதடவை உரக்கச் சொன்னாள். வெளியே படுத்திருந்த நாய் ஓட்டமாய் வந்து கிழவியின் கையிலிருந்த பதுமையைப் பிடுங்கிக்கொண்டு ஓடிப்போய் விட்டது. அதை எவ்வளவு துரத்தியும் அது ஓடித் தட்டான் வீட்டையடைந்து விட்டது. தட்டான் கிழவியைப் பார்த்து, "அம்மா! நீங்கள் அதைக் கெட்டியாகப் பிடித்திருக்கவேண்டும். நானென்ன செய்யட்டும்" என்றான். கிழவி அழுதுகொண்டே "நான் ஒருவரையும் நம்பாமல் எவ்வளவோ ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்த பதுமையை இப்போது இழந்தேன். கடவுள் எனக்குச் சரியான தண்டனை விதித்தார்" என்று வருந்தினாள். தட்டான் தானும் வருந்துவதாகப் பாசாங்கு செய்துவிட்டு அவளைத் தேற்றித் தன் வீடு சென்றான்.

சில நாட்கள் கழிந்தன. அந்தத் தட்டான் நாயினுதவியால் அபகரித்து வந்த பொற் பதுமையைச் செப்பனிட்டுக் கிழவியிடம் கொண்டுபோய்க் கொடுத்துத் தான் செய்த தந்திரத்தைச் சொன்னான். அவள் அவனை

வாழ்த்தி வெகுமதி கொடுத்தனுப்பினாள். ஜனங்களெல்லோரும் அவனது சாமர்த்யத்தையும் தயாள குணத்தையும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

ஹாஸ்யம்.

ஓர் உபாத்தியாயர் தமது வகுப்புப் பிள்ளைகளில் ஒருவனைப் பார்த்து 'செல்வம் சகடக்கால் போல் வரும்' என்னும் வாக்கியத்திற்குப் பொருள் கூறும்படி கேட்க அவன் ஒருவிதத் தடங்கலுமில்லாமல், "ஐயா! நாணயங்கள் வட்டமாயிருப்பதால் சக்கரத்தைப்போல் உருளுகின்றன. உருண்டால் அவைகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போய்விடுகின்றன. ஆதலால் தான் செல்வம் சகடக்கால் போல்வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது" என்று கூறிவிட்டு அமர்ந்தான். உபாத்தியாயர் வாயைத் திறந்து பேசுவதற்கு முன் மற்றொரு பையன் எழுந்து "ஐயா! நாம் இனி பயப்படவேண்டுவதில்லை. இனி அச்செல்வம் சகடக்கால் போலோடாது. இராஜாங்கத்தார் நாணயங்களைச் சதுரமாகச் செய்து வருகின்றனரன்றோ? இதுவும் ஒரு நல்ல வழியே" என்று கூறியுட்கார்ந்தான். இவனது சமயோசித விடையைக் கேட்ட எல்லோரும் கொல்லென்று நகைத்தனர். உபாத்தியாயரும் நகைத்தார்.